பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 26 செவ்வாய்க்கிழமை 10.01.2023 கதிர் 316

## வடமராட்சி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்., வடமராட்சியில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையிலிருந்து பயணித்தவர், தவறி வீழ்ந்து படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 2

# கூட்டமைப்பின் பங்காளிகள் தேர்தலில் தனித்துப் போட்டி!



## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று பங்காளிக் கட்சிகளும் தனித்துப் போட்டியிடுவது எனக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார். 2

## தேர்தலைப் பிற்போட முடியாது

### ஆணைக்குழு திட்டவட்டம்

அரசு நினைத்த மாதிரி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பல காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நான்கு மாதங்களுக்கு அதாவது, ஜுலை மாதம் வரை ஒத்திவைப்பதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது என வெளியாகிய செய்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே 8

## ‘மொட்டு’ – ‘யானை’ கூட்டணி

### வெளியானது அறிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார 8

## யாழில் கிணற்றிலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

யாழ். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்கின்ற பிரதான வீதியில் பொன்னாலை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கிணற்றிலிருந்து இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 2

## இரண்டரை வயது குழந்தை காய்ச்சலால் பரிதாபச் சாவு

நீண்ட நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இரண்டரை வயது பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ். தென்மராட்சி, மீசாலையைச் சேர்ந்த லவராஜ் ஆர்நிதா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. 2

## திருடப்பட்ட தங்க நகைகளுடன் வசமாகச் சிக்கிய குடும்பஸ்தர்!



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் திருடப்பட்ட தங்க நகைகளுடன் முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு 2

## பருத்தித்துறை நகர சபையில் மீண்டும் கூட்டமைப்பு ஆட்சி!

### புதிய தவிசாளராக நவரட்ணராஜா தெரிவு; முன்னணியினரின் வியூகம் தோற்கடிப்பு



பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியமைத்துள்ளது. கூட்டமைப்பின் சார்பில் தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்டவர் இரண்டு மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் பருத்தித்துறை நகர சபையின் 2

## 14 வருட சிறை வாசத்தின் பின் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதி

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசாவின் வாதத்தையடுத்து



தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அதிநவீனதொழில்நுட்பக்கருவிகளை கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட கனகரத்தினம் ஆதித்யன் என்ற அரசியல் கைதி 14 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆதித்யன், 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து 2


## ஆட்சியைப் பிடிக்க ஜே.வி.பி. புதிய வியூகம்



இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்காக ஜே.வி.பி. புதிய வியூகம் ஒன்றை வகுத்துக் களமிறங்கியுள்ளது. அதாவது வெளிநாடுகளுக்குச் சென்று பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை அரசியல் கட்சிகளுக்கான மக்கள் ஆதரவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை 8

## பொலிஸ் சார்ஜன்ட் வீதியில் சடலமாக மீட்பு!



(வவுனியா நிருபர்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இன்று காலை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வீதியில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தாண்டிக்குளத்திலிருந்து புதுக்குளம் 8

## கூட்டமைப்பின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது என்று சுமந்திரன் எம்.பி. கூறினார். சம்பந்தன் எம்.பி. தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இலங் கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதி ராஜா வும், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் பங்கேற்றனர்.

ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., பொதுச்செயலாளர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மற்றும் ஹென்றி மகேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

புளொட் சார்பில் ஆர்.ராகவன் பங்கேற்றார். சுகயீனம் காரணமாகப் புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி. கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசுடனான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சு உட்பட சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இதில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கும், ஏனைய பங்காளிகள் (ரெலோ, புளொட்) தனிவழி செல்வதற்கும் இணக்கம் எட்டப்பட்டது என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

சிலவேளை புளொட், ரெலோ என்பன இணைந்து போட்டியிடக்கூடும் அல்லது தனித்தனியே போட்டியிடக்கூடும். அது தொடர்பில் அந்த இரு கட்சியினரும் தீர்மானம் எடுப்பார்கள்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எவரும் போட்டியிடுவதில்லை. ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் மூன்று பங்காளிக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு சபைகளில் ஆட்சி அமைப்போம் – என்று சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

## திருடப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் கடந்த 3 ஆம் திகதி வீடு புகுந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளரால் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களின் வழிகாட்டலில் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பூ.கஜேந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து திருடப்பட்டதாகக் கருத்தப்படும் காப்பு, சங்கிலி உள்ளிட்ட தங்க நகைகளும் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வடமராட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராசு புவனேஸ்வரன் (வயது - 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து வேலைக்கு மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் பயணித்துள்ளார். இவர் தலைக்கவசம் அணியாது பின்னால் இருந்துள்ளார். மந்திகைச் சந்தியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தபோது இவர் தவறி வீழ்ந்துள்ளார்.

இவர் படுகாயங்களுடன் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 5ஆம் திகதி குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தையைத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்குப் பெற்றோர் சேர்ப்பித்தனர்.

4 நாள்களின் பின்னர் மீண்டும் காய்ச்சல் தொடர்ந்துள்ளது. இதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குழந்தையைப் பெற்றோர் சேர்த்தனர். இந்தநிலையில் குழந்தை நேற்று உயிரிழந்தது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## பருத்தித்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிசாளராக இருந்த யோ.இருதயராஜா (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) கடந்த மாதம் பதவி விலகியதைத் தொடர்ந்து உருவான தவிசாளர் வெற்றிடத்துக்கே இன்று தேர்தல் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா போட்டியிட்டார். அவரை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி., சமத்துவக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் என 8 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை, கூட்டமைப்பின் தவிசாளர் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 6 வாக்குகளையே பெற்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்களும் அவரை ஆதரித்தனர்.

அதன்பிரகாரம் பருத்தித்துறை நகர சபையின் புதிய தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நவரட்ணராஜா தெரிவு செய்யப்பட்டார். ஈ.பி.டி.பியின் ஒரு உறுப்பினர் சபைக்கு இன்று சமூகமளிக்கவில்லை.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமோகன் கிருாந்தன் (வயது - 21) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் கடந்த 5 மாதங்களாகப் பொன்னாலையில் உள்ள சித்தப்பா வீட்டில் வசித்து வந்துள்ளார். அவரது 21ஆவது பிறந்ததினம் நேற்றுமுன்தினமாகும். இந்தநிலை யில் நேற்றுமுன்தினம் இரவிலிருந்து அவர் காணாமல்போயுள்ளார்.

அவரை உறவினர்கள் தேடி வந்த நிலையில், கிணற்றிலிருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். காலணி மற்றும் சைக்கிள் என்பன கிணற்றுக்கு வெளியே காணப்பட்டன.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் நீண்ட காலமாக உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி சிகிச்சை பெற்று வந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 14 வருட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் மகனான ஆதித்யன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து கொழும்பு நீதிவான் நீதிமன்றின் நீதிபதியால் நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு இன்று விடுதலை செய்யப்பட்டார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐக்கியம் முடிந்தது

அமிலப் பரிசோதனையில் இறங்கி இருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இது, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இறுதி அத்தியாயத்தை எழுதும் நடவடிக்கையா அல்லது புத்துயிர்ப்புக்கான புதிய அணுகுமுறையா என்பதை தேர்தல் முடிவுகள்தான் நமக்கு எடுத்துக் கூறும்.

அட்சர கணித விஞ்ஞான அடிப்படையில் – தொழில்நுட்ப ரீதியான கணக்கீட்டில் – பங்காளிக் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலை அணுகுவது கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கையில் நல்ல பெறுபேற்றைத் தரும் என்ற யோசனையின் பேரில்தான் இப்படி பங்காளிக் கட்சிகள் பிரிந்து நின்று, தனித்தனி வேட்பாளர் பட்டியல்கள் மூலம், தேர்தலை எதிர்கொள்ளும் அணுகுமுறை குறித்து முதலில் பிரேரிக்கப்பட்டது; யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால், இப்போது தனித்தனியாகத் தேர்தலில் நிற்க முடிவெடுக்கப்பட்டு இருப்பது அந்த நோக்கத்துக்கு அல்ல என்பது அப்பட்டமானது.

நான் பெரிதா, நீ பெரிதா என்று ஆதரவுத் தளவலிமையை சோதனை செய்வதற்கான களத்திற்காகவே இப்படி பிரிந்து நின்று தேர்தலை அணுகும் முறைமை ஏற்பட்டு இருக்கின்றது என்பது கண் கூடு.

ஏற்கனவே நீண்ட காலம் கறுவிக் கொண்டிருக்கும் உள்முரண்பாடுகள், இப்போது தரப்புகள் திறந்து விடப்பட்டிருக்கின்றமையினால் வெளிப்படையாக வெடிக்கும் சூழ்நிலையும் உண்டு.

அதனால் வன்மம், குரோதம், கீழ்த்தரமான பிரசாரங்கள், முரண்பாடுகள் எல்லாம் தாராளமாக – இன்று வரை கூட்டமைப்பாக இருக்கும் தரப்புகள் இடையே கூட – வெடிக்கும் ஆபத்து நிலைமையும் உண்டு.

எது, எப்படி என்றாலும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தத்தமது தரப்புகளை சுயமதிப்பீடு செய்வதற்கு இந்தத் தனித்தனி அணுகுமுறை என்பது உதவக் கூடும்.

ஆனாலும், கூட்டமைப்புப் பங்காளிகளான ரெலோ, புளொட் ஆகியவை ஏற்கனவே கூட்டமைப்புக்கு வெளியில் இருக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியோடு அல்லது பிற தரப்புகளோடு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டால் அவற்றின் தனித்துவ மதிப்பீடு யாது என்பது இப்போதும் சரியாக – துல்லியமாக – மதிப்பிட முடியாமல் போகும் என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படாமல் நடந்தால், அதன் முடிவுகள் ஆங்காங்கே உள்ளூராட்சி சபைகளை மேற்கொண்டு நடத்துவதற்குக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுக்கு தேர்தலின் பின்னர் ஒன்றுபட்டே செயல்பட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தலாம். அது நடக்கலாம்.

ஆனாலும், கூட்டமைப்புக் கட்சிகளின் இப்போதைய இந்த முடிவு, அதன் ஐக்கியத்துக்கான சாவு மணி என்பது போன்றே கருதப்பட வேண்டும்.

# நாட்டு மக்களின் மனங்களில் தற்போதும் மொட்டு இருக்கிறது

## சாகர காரியவசம் நம்பிக்கை



மக்களின் மனங்களில் தற்போதும் மொட்டுக்கட்சி இருக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை கொழும்பில் நேற்று(திங்கட்கிழமை) செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்கு எதிராக சமூக ஊடகங்களில் பல்வேறு சேறுபூசல்கள், குற்றச்சாட்டுக்களை சுமத்தினாலும் மக்களின் மனங்களில் தற்போதும் மொட்டுக்கட்சி இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டுக்காக இணைந்து பணியாற்ற முடிந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஒன்றாக இணைந்து பணியாற்றுவது என நடைபெற்ற பேச்சில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரசாரங்கள் உட்பட தேர்தல் பணிகளில் பஸில் ராஜபக்ஷ செயற்பாட்டு ரீதியாக ஈடுபடுவார் எனவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறப்பான வெற்றியை பெறும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் பங்கேற்றார் செந்தில் தொண்டமான்!



இந்தியாவில் நேற்று(திங்கட்கிழமை) நடைபெற்ற பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டில், பிரவாசி பாரதிய சமான் விருதை பெற்ற ஸ்ரீ சிவக்குமார் நடேசனுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தனது வாழ்த்துக்களையும் இதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

# பொதுஜன பெரமுனவுக்கு சவாலானது அல்ல உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## பந்துல இறுமாப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தல் பொதுஜன பெரமுனவுக்கு சவாலான தேர்தல் அல்ல என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை கொழும்பில் நேற்று(திங்கட்கிழமை) செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எந்த சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்டாலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின்கட்டண அதிகரிப்பை கண்டித்து கொழும்பில் கவனவீர்ப்பு போராட்டம்!







மின்கட்டண அதிகரிப்பை கண்டித்தும், அரசியல் தலைவர்கள் தங்களது மின் பாவனை கட்டணங்களை முதலில் செலுத்துமாறு வலியுறுத்தியும் இலங்கை மின்சார சபை முன்றிலில் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் பொது மக்களால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# இந்தோனேசியாவில் நேற்றிரவு பயங்கர நிலநடுக்கம் மக்கள் வீதிகளில்: சுனாமி எச்சரிக்கை, பின் வாபஸ்!




ஜகார்தா, ஜன.10

இந்தோனேசியா நாட்டில் நேற்று இரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்நாட்டின் டனிம் பர்தீவு மாகாணத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று இரவு சரியாக 10.47 மணியளவில் ஏற் பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்து மக்களை அச்சத்துக்குள்ளாக்கி யமையால், இரவில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. மேலும், இந்த நிலநடுக்கத்தால் இந் தோனேசியாவில் சுனாமி முன் எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின் அது விலக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படு கின்றது. பண்டா கடலில் 97 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படு கின்றது.

## ஜெர்மனியில் பயங்கரவாதத் தாக்குதல் நடாத்தச் சதித் திட்டம்; ஈரானியர் கைது






பெர்லின், ஜன.10

ஜெர்மனியில் டார்ட்மண்ட் பகுதியருகே கேஸ்டிராப்-ராக்சல் என்ற இடத்தில் சந்தேகத்திற்கு உரிய வகையில் நடமாடிய நபரை பொலிஸார் தடுத்து விசாரணை செய்தனர். அதில், அந்த நபர் சையனைடு மற்றும் ரிசின் உள்ளிட்ட நச்சுப் பொருழ்ல்களை விலைக்கு வாங்கினார் எனத் தெரிய வந்ததையடுத்து ஈரானிய நாட்டைச் சேர்ந்த 32 வயது நபரான அவரை பொலிசார் கைது செய்து காவலில் கொண்டு வந்தனர்.

அவரது வீட்டை தங்களது வளையத்திற்குள் கொண்டு வந்த பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட தொடங்கினர். இதுபற்றி டஸ்செல்டார்ப் பொலிஸ், ரெக்லிங்ஹாசென் பொலிஸ் மற்றும் முன்ஸ்டர் பொலிசார் கூட்டாக இணைந்து அறிக்கை வெளியிட்டு உள்ளனர். அதில், நீதிபதி ஒருவரின் உத்தரவின் பேரில் சோதனை நடத்தி உள்ளோம். சந்தேகநபர் தீவிர வன்முறை செயலுக்குத் தயாராகி வந்துள்ளார் என சந்தேகிக்கப்படுகிறது. சையனைடு, ரிசின் போன்ற பொருள்களை வாங்கி இருப்பது இஸ்லாமிய தூண்டுதலின் பேரிலான தாக்குதலை நாட்டில் நடத்த கூடிய ஆபத்து காணப்படுகிறது. இதுபற்றி குற்றவாளியுடன் மற்றொரு நபரையும் காவலுக்கு எடுத்து விசாரணை நடத்தி வருகிறோம் - எனத் தெரிவித்து உள்ளது.

## சூடானில் ஆடையிலேயே சிறுநீர் கழித்த ஜனாதிபதி வீடியோ வெளியீடு; ஆறு பத்திரிகையாளர்கள் கைது



தெ.சூடான், ஜன.10

ஆபிரிக்க நாடான தெற்கு சூடான், 2011 ஆம் ஆண்டு சூடானிடம் இருந்து விடுதலை பெற்றமை முதல் அந்த நாட்டின் அதிபராக இருந்து வருபவர் சல்வா கீர்.

இவர் கடந்த மாதம் தலைநகர் ஜூபாவில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது நிகழ்ச்சியில் அந்த நாட்டின் தேசிய கீதம் பாடப்பட்டது. அதிபர் சல்வா கீர் மார்பில் கை வைத்த படி நின்று தேசிய கீதத்துக்கு மரியாதை செலுத் திக் கொண்டிருந்தார்.

அப்போது அவருக்கு சிறுநீர் வந்த நிலையில், நின்றபடியே தனது ஆடையிலேயே சிறுநீர் கழித்தார். இது நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்த அரசு ஊடகத்தின் கமராக்களில் அது பதிவானது. ஆனால் அரசு ஊடகம் அதனை ஒளிபரப்ப வில்லை.

இந்த நிலையில் சம்பவம் நடந்த பல நாள்களுக்கு பிறகு அதிபர் சல்வா கீர் தனது ஆடையி லேயே சிறுநீர் கழித்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங் களில் பரவியுள்ளது.

இந்நிலையில், வீடியோவை பார்த்த பலரும் அதிபரின் உடல் நிலை குறித்து விமர்சனங்களையும் கேள்விகளையும் முன்வைத்து வருகின்றனர். இதனால் இந்த விவகாரம் அங்கு பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இதனையடுத்து, வீடியோவை வெளியிட்டனர் எனக் கூறி அரசு ஊடகத்தில் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் 6 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள அந்த நாட்டின் பத்திரி கையாளர்கள் பாதுகாப்பு குழு கைது செய்யப்பட் டுள்ள 6 பத்திரிகையாளர்களையும் உடனடியாக விடு தலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு 100 மில்லியன் டொலர் வழங்கிய அமெரிக்கா




வொஷிங்டன், ஜன.10

பாகிஸ்தானில் பருவகால ம ழைபாதிப்புகளால் கடந்த ஆண்டில் அந்நாடு முழுவதும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால், வீதி களும், பாலங்களும் முறையே துண்டிக்கப்பட்டும், நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இதன் காரண மாக பாகிஸ்தானில் 3.3 கோடி பேர் வரை பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பாகிஸ்தானில் வெள்ள பாதிப்புக்கு 1,700க்கும் அதிகமானோர் உயிரிழந்துள் ளனர். பல ஆயிரக்கணக்கானோர் வெள்ள பாதிப்பில் காயமடைந்தனர். இந்த நெருக்கடியான சூழலில் உலக நாடுகளின் உதவியை பாகிஸ்தான் எதிர்பார்த்திருந்தது. இதற்கிடையே, பாகிஸ்தானின் வெளியுறவு அமை ச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி, அமெரிக்க வெளி யுறவு மந்திரி அந்தோணி பிளிங்கனை வொஷிங் டன் நகரில் நேரில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர், முதல் கட்டமாக பாகிஸ்தானின் வெள்ள நிவாரண மற்றும் மனித நேய அடிப்படையிலான நிதி உதவியை அமெ ரிக்கா ஒதுக்கியுள்ளது. இந்நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு மனிதநேய அடிப்படையில் மேலும் 100 மில்லியன் டொலரை உணவு பாதுகாப்பு உதவி தொகையாக அறிவிக் கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## பிரேசில் முன்னாள் அதிபர் போல்சனாரோ அமெரிக்க மருத்துவமனையில் அனுமதி



வொஷிங்டன், ஜன.10

பிரேசில் நாட்டில் சமீபத்தில் நாடாளும ன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் அதிபர் ஜெர் போல்சனேரோ தோல்வியடைந்தார். முன்னாள் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா வெற்றிபெற்றார். இதையடுத்து, பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப் பேற்றுக்கொண்டார். வாக்கு வித்தியாசம் மிகக்குறைவாக இருந்த நிலையில் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

குறிப்பாக, போல்சனேரோவின் ஆதரவாளர்கள் நேற்று பிரேசில் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். தேர்தலில் போல்சனேரோ தோல்வியடைந்தார் என அறிவிக்கப்பட்ட நிலையில் அதை ஏற்றுக் கொள்ளாத அவரது ஆதரவாளர்கள் வன் முறையில் ஈடுபட்டனர். தனது ஆதரவாளர்கள் பிரேசிலில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் முன்னாள் அதிபர் போல்சனேரோ உடல்நலக்குறைவு காரணமாக அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். அமெரிக்காவின் ஓர்லெண்டோ மாகாணத்தில் உள்ள மருத்துவமனையில் போல்சனேரோ நேற்று அனுமதிக்கப்பட்டார். வயிற்று வலி உள்ளிட்ட பிரச்சினை அவர் மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. போல்சனேரோவில் உடல்நிலை தற்போது சீராக உள்ள நிலையில் அவரை மருத்துவக்குழுவினர் தொடர்ந்து கண் காணித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

# தமிழ்நாடு கவர்னரை ஆட்சேபித்து சட்டசபைக்கு வருகிறது பிரேரணை

## சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் முஸ்தீபு



சென்னை,ஜன.10

மாநில அரசு தயாரித்த உரையிலிருந்த சட்டம்-ஒழுங்கு, திராவிட மொடல் உள்ளிட்ட பல்வேறு வார்த்தைகளை வாசிக்காமல் தவிர்த்து விட்டார் கவர்னர். இந்திய வரலாற்றில் எந்த கவர்னரும் இதுபோல் நடந்து கொண்டது இல்லை.

தமிழக சட்டசபையில் கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று தேசிய கீதம் பாடுவதற்கு முன்பே புறப்பட்டு சென்று விட்டார். கவர்னர் உரையின் போதும் அரசு சார்பில் தயாரித்து கொடுக்கப்பட்ட உரையை முழுமையாக படிக்காமல் சில வாசகங்களை கூடுதலாக சேர்த்தும் படித்தார். சட்டம்-ஒழுங்கு, திராவிட மாடல் உள்ளிட்ட பல்வேறு வார்த்தைகளை வாசிக்காமல் தவிர்த்து விட்டார். இந்த விவகாரம் அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டது. இந்த நிலையில் சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை சபாநாயகர் அப்பாவுவை இன்று சந்தித்து கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தனி நபர் பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று குறிப்பிட்டு கடிதம் ஒன்றை அளித்தார்.

அதன் பிறகு செல்வபெருந்தகை எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று சட்டசபையில் நடந்து கொண்ட செயலைக் கண்டித்து அவருக்கு எதிராக தனி நபர் பிரேரணையை காங்கிரஸ் கட்சி கொடுத்துள்ளது. இந்த தனிநபர் பிரேரணையை நாளைய சட்டசபை கூட்டத்தில் எடுக்குமாறு கூறியுள்ளோம். சபாநாயகரும் சரி என்று சொல்லி இருக்கிறார். இந்திய வரலாற்றில் எந்த கவர்னரும் இதுபோல் நடந்து கொண்டது இல்லை. இந்திய அளவில் பிரதமர் மோடி என்ன செய்கிறாரோ அதை இங்கு கவர்னர் செய்ய ஆரம்பித்துள்ளார். கவர்னரை தமிழக மக்கள் புறம் தள்ள வேண்டும். வழக்கமாக கவர்னர் மாளிகையில் பொங்கல் வாழ்த்து அச்சிடும் போது தமிழ்நாடு ஆளுநர் என அச்சிடுவார்கள். ஆனால் இவர் இந்த ஆண்டு தமிழக ஆளுனர் என்று அச்சிட்டு அழைப்பு அனுப்பி உள்ளார். இது பா.ஜனதாவின் செயலை வெளிப்படுத்துவது போல் உள்ளது. ஆர்.எஸ்.எஸ்ஸின் சித்தாந்தத்தை தூக்கிப் பிடிப்பதாக உள்ளது. - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 2022இல் மட்டும் 34புலிகள் சாவு பேரதிர்ச்சியில் மத்தியபிரதேசம்!



இந்தியா, ஜன.09

இந்திய மத்திய வனத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்தியா முழுவதும் புலிகளைக் கணக்கெடுத்து வருகிறது. அந்த கணக்கெடுப்பு கடந்த 2022 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

அதில், புலிகள் அதிகமாக உள்ள மத்தியபிரதேசத்தில் 34 புலிகள் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. புலிகள் எண்ணிக்கை யில் அடுத்த இடத்தில் உள்ள கர்நாடகாவில் 15 புலிகள் இறந்துள்ளன.

கடந்த 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், மத்தியபிரதேசத்தில் 526 புலிகளும், கர்நாடகாவில் 524 புலிகளும் இருந்தன. சிறிய வித்தியாசத்தில், நாட்டின் 'புலிகள் மாநிலம்' என்ற அந்தஸ்தை மத்தியபிரதேசம் தக்க வைத்துக்கொண்டது.

ஆனால், கர்நாடகாவை விட இருமடங்குக்கு அதிகமான புலிகள் இறந்திருப்பதால், புலிகள் மாநிலம் என்ற அந்தஸ்தை மத்தியபிரதேசம் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், கர்நாடகா அதை கைப்பற்றுகிறது. மத்தியபிரதேசத்தில் அதிகமான புலிகள் இறந்திருப்பது மர்மமாக இருப்பதாக அம்மாநில வனத்துறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோவை குண்டு வெடிப்புச் சந்தேகநபர்களை காட்டுக்குள் கூட்டிச் சென்று விசாரிக்க முடிவு




கோவை,ஜன.10

கோவை கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைதாகியுள்ள, 6 பேரை சத்தியமங்கலம் வனப்பகுதிக்கு அழைத்து சென்று விசாரிக்க இந்திய தேசியப் பாதுகாப்பு முகமை (என்.ஐ.ஏ) அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

கோவை கோட்டை ஈஸ்வரன் கோவில் முன் கடந்த ஆண்டு ஒக்டோபர் 23 இல் நடந்த கார்க் குண்டு வெடிப்பில் ஐ.எஸ். பயங்கரவாத. எனக் கருதப்படும் ஜமோ முபீன்(வயது28) பலியானார். இந்த வழக்கில் ஜமோ முபீன் உறவினர்கள் உட்பட, 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கும்பல், கோவையில் பல்வேறு முக்கிய இடங்களில் குண்டு வைக்க சதித்திட்டம் தீட்டியது விசாரணையில் தெரியவந்தது.

இதற்கென, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அடுத்த ஆசனூர் வனப்பகுதியில் சதி ஆலோசனை நடத்தியதும் தெரியவந்தது. அதில் கலந்து கொண்ட அனைவரும் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் மொபைல் போனை அணைத்து வைத்திருந்ததும், ஒரே நேரத்தில் மீண்டும் போனை 'ஆன்' செய்ததும் தொழில்நுட்ப விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சதித்திட்டத்தில் பேசியது என்ன என்பது பற்றி அறியும் நோக்கத்துடன், கைதானவர்களில், 6 பேரை மட்டும் என்.ஐ.ஏ.அதிகாரிகள் தமது பாதுகாப்பில் எடுத்துள்ளனர்.

முகமது தல்ஹா, கே் ஹிதாயத்துல்லா, முகமது ரியாஸ் நவாஸ், முகமது தவுபீக், சனோபர் அலி, பெரோஸ் இஸ்மாயில் ஆகிய அந்த, 6 பேரையும் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதிக்கு அழைத்துச்சென்று விசாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வனத்துக்குள் அவர்கள் சென்ற இடங்கள் பற்றி ஆராய்ந்து, முழுமையான தகவல் திரட்டவும், தொழில்நுட்ப ஆதாரங்கள் சேகரிக்கவும், இந்த காவல் விசாரணை பயனுள்ளதாக இருக்கும் என்று, என்.ஐ.ஏ. அதிகாரிகள் கருதுகின்றனர்.



# இறுதிக் கட்டத்தை நோக்கி ராகுல் காந்தியின் யாத்திரை

சண்டிகர்,ஜன.10

ராகுல் காந்தியின் நடை யாத்திரை இன்று பஞ்சாபில் தொடங்கும் நிலையில், இன்னும் ஜம்மு காஷ்மீரில் மட்டும் யாத்திரை நடைபெற உள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி பாரத் ஜோடோ யாத்திரை என்ற பெயரில் இந்திய ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டு வருகிறார். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 3 ஆயிரத்து 500 கிலோ மீற்றர்கள் பாத யாத்திரையாக செல்லும் இந்த பயணம் 150 நாள்கள் நடைபெறுகிறது. தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7 ஆம் திகதி தொடங்கிய இந்த யாத்திரை கேரளா, கர்நாடகா, மராட்டியம், ராஜஸ்தான், டெல்லி, உத்தரபிரதேசம் மற்றும் அரியானா உள்பட பல்வேறு மாநிலங்கள் வழியாக தற்போது பஞ்சாபில் நுழைகிறது. பஞ்சாபில் இன்று தொடங்கும் நிலையில், இன்னும் ஜம்மு காஷ்மீரில் மட்டும் ஈது நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படாது என்ற வாக்குறுதியை ஜனாதிபதி ரணில் மீறக்கூடாது!

## தீர்வு குறித்து அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா கோரிக்கை



(எம்.எம்.அஸ்லம்)

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக்கு அநீதியிழைக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2002 காலப்பகுதியில் வழங்கியிருந்த வாக்குறுதியை மீறக்கூடாது என அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மேற்படி உலமா சபையின் சார்பில் அதன் தலைவர் எஸ்.எச்.ஆதம்பாவா மௌலவி , ஏ.எல்.நாசிர் கனி மௌலவி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தபோது 2002ஆம் ஆண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அவர் தலைமையில் அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவ்வேளையில் 11.10.2002ஆம் திகதியன்று கிழக்கு மாகாண ஜம்இய்யதுல் உலமாப் பிரதிநிதிகள் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா தலைமையில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இவ்விடயம் பற்றி பேசியிருந்தோம். அவ்வேளையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது முஸ்லிம்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாதென அவர் உறுதியளித்திருந்தார். அத்துடன் அரசியல தீர்வு தொடர்பாக தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வுத் திட்டங்களின் ஆவணத்தில் முஸ்லிம்களுக்குரிய தீர்வுத் திட்டமும் உள்ளடக்கப்படுமென்றும் தெரிவித்திருந்தார். அந்த வாக்குறுதியை உரிய நேரத்தில் அவர் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலையில், இம்மாகாணம் வேறு எந்த மாகாணத்தோடும் இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற விடயத்தை இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்றுக் கொள்ளும் நாம், ஒரு சமூகத்தின் பிரச்சினையைத் தீர்க்கப்போய் அதனால் மற்றொரு சமூகத்துக்கு பிரச்சினை ஏற்பட இடமளிக்கக் கூடாது என்ற விடயத்தையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம் என்று அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா மேலும் தெரிவித்துள்ளது.

## தைப்பொங்கல் பட்டத்திருவிழா திருக்கோவிலில் 5 ஆவது முறை

(காரைதீவு குறூப் நிருபர் சகா)


திருக்கோவில் பிரதேசத்தில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு ஐந்தாவது முறையாக இடபெறவுள்ள பட்டம் விடும் திருவிழா எதிர் வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00மணி முதல் மாலை 6.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

தைத்திருநாளை முன்னிட்டு, திருக்கோவில் பிரதேச பொது மக்களால் ஐந்தாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பட்டத்திருவிழா திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய முன்றிலில் இடம் பெறும்.

சிறந்த பட்டங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

நிகழ்வின் சிறந்த புகைப்படப் பிடிப்பாளருக்கான சிறப்பு உடனடிப்பரிசும் வழங்கப்படும். நிகழ்வின் உடனடி புகைப்படத்தை மிவவஷ்மிளக்ஷஔளவி-மிஷ்ஸளயி2023 எனும் முகநூலில் தரவேற்றம் செய்து கிடைக்கும் விருப்புகளின் அடிப்படையில் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## சம்மாந்துறை தவிசாளரைத் தொடர்ந்து 7 உறுப்பினர்கள் அதிரடி இராஜினாமா!



பாறுக் ஷிஹான்

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌாட் தனது இராஜினாமா கடிதத்தை உத்தியோகபூர்வமாக தேர்தல் ஆணையாளருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

இதனை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.சி.எம்.சஹீல், எம்.எஸ். சரீபா, எம்.ரீ.பௌசுள்ளாஹ், கே.எம்.இன்பவதி, என்.கோவிந்தசாமி, கே.குலமணி, ஆர்.வளர்மதி ஆகியோர்கள் தங்களின் இராஜினாமா கடிதத்தை சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட்டிடம் கையளித்தனர்.

இராஜினாமா கடிதங்கள் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வருகின்ற 20 திகதிற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் தென்படுகின்றது. அவ்வாறு கலைக்கப் படாவிட்டாலும் கூட எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கல்







(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொது மக்கள் நீண்டகாலமாக பராமரித்துவரும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் காணி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்தும் இதுவரை காலமும் கிடைக்கப்பெறாமல் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இறக்காமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டலுடன் செயலக காணிப் பிரிவினால் விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துரிதகதியில் பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் இனம்காணப்பட்டு அவர்களுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அத்தகைய காணிகளுக்கு முறையான அரச அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிக்குட்பட்ட வரிப்பத்தான்சேனை – 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷான் (நளீமி) தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு, விசேட அதிதியாக அம்பாரை மாவட்ட காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஐ.எல். இப்திகா பானு கலந்து கொண்டார்.

இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நசீல், கணக்காளர் றிம்ஸியா அர்சாட், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், நிருவாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், கிராம சேவக நிருவாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திரசிறி யசரட்ண பண்டார, காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி. நிசம்மா உம்மா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. நிசார்தீன், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரிவிற்குரியகிராமஉத்தியோகத்தர் மற்றும் பயனாளிகள் உட்பட பொதுமக்களும் அதில் கலந்து கொண்டனர்.

# தமிழாராட்சி மாநாட்டு படுகொலைகள் நினைவு நிகழ்வு தமிழரசு ஏற்பாட்டில்!

## உயிர்நீத்த யோகநாதனின் நினைவாக அவர் மகன் பத்மஸ்ரீ அனுசரணையில்





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒழுங்கமைப்பில் தமிழாராட்சி மாநாட்டு படுகொலைகள் 49 ஆவது நினைவுதினம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றது.

இந்த நினைவு நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எவ்.எக்ஸ்.குலநாயகம், வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் அ.ஜெபனேசன், வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான லயன் சி.ஹரிகரன்ஈ லயன் செ.விஜயராஜ், லயன் பா.மரியதாஸ், லயன் ஐ.மயூரன், சே.கலையமுதன், வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் தனகோபி மற்றும் கட்சி ஆதரவாளர்கள், படுகொலையுண்டவர்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலையுண்டவர்களுக்கு ஊதுபத்தி, கற்பூரம் ஏற்றி அஞ்சலி நிகழ்வு செலுத்தியபின்னர், அவர்களின் பிரதான நினைவுத் தூபிக்கு லண்டனில் இருந்து வருகைதந்த படுகொலையில் உயிரிழந்த யோகநாதனின் மகன் பத்மஸ்ரீ மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியமையைமத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அவைத்தலைவர் சி.சிவஞானம் மற்றும் பிரதேசசபைத் தவிசாளர் உறுப்பினர்கள் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் ஒன்பது அல்லது பதினொரு பேர் இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஏற்படுத்திய குழப்ப நிலையால் மரணம் அடைந்தனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் நிகழ்ந்த வாகன விபத்துகள், இந்தக் குழப்பங்களால் ஏற்பட்ட அதிர்ச்சியில் ஏற்பட்ட இதய வலி என்பன இந்த மரணங்களுக்குக் காரணமாயின. இந்த இறப்புகள், பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்குக்கு உந்திய ஒரு முக்கிய துன்பியல் நிகழ்வு ஆகும்.

## பிறந்தநாளன்று காணாமல்போன இளைஞன் பொன்னாலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!

பொன்னாலை பிள்ளையார் கோவிலடியில் உள்ள குளத்துக்கு அருகில் உள்ள கிணறு ஒன்றில் இளைஞர் ஒருவரது சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மூளாய் – வேரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் கடந்த 5 மாதங்களாக பொன்னாலையில் உள்ள சித்தப்பா வீட்டில் வசித்து வந்துள்ளார்.

அவர் தனது 21 ஆவது பிறந்ததினமான ஞாயிற்றுக்கிழமை இரவே அவர் காணாமல் போயுள்ளார். அதனையடுத்து உறவினர்கள் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே அவர் கிணற்றில் சடலமாக இனங்காணப்பட்டுள்ளார். அவரது காலணி மற்றும் சைக்கிள் என்பன கிணற்றுக்கு வெளியே இருந்துள்ளன.

உயிரிழந்த இளைஞரான 21வயது கிருஷ்ணமோகன் கிருசாந்தன், பல மாதங்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார் எனக் கூறப்படுகிறது.

மேற்படி இளைஞரது மரணம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த மூன்றாம் சுற்றுப் பேச்சு நேற்று ஆரம்பம்!

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான சந்தையை விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பில் இலங்கை மற்றும் தாய்லாந்து அதிகாரிகளுக்கு இடையிலான மூன்றாம் சுற்று பேச்சு நேற்று (திங்கட்கிழமை) கொழும்பில் ஆரம்பமானது.

இந்தப் பேச்சு நாளையும் தொடரவுள்ள நிலையில், இதில் கலந்துகொள்வதற்காக தாய்லாந்து நாட்டின் சார்பில் ஓர்மன் சப்தவீதம் தலைமையில் 26 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று நாட்டுக்கு வருகை தந்துள்ளது. அதேவேளை இலங்கை சார்பில் கே.ஜே.வீரசிங்க தலைமையிலான குழுவினர் இந்தப் பேச்சில் பங்கேற்றுள்ளனர்.

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான சந்தையை விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் முன்மொழிந்திருந்த நிலையில், முதலாவதாகத் தாய்லாந்து அதற்குச் சாதகமான பிரதிபலிப்பை வெளிக்காட்டியது. அதன்படி, முதலாம் மற்றும் இரண்டாம் சுற்று பேச்சுகளை அடுத்து மூன்றாம் சுற்று பேச்சு நேற்று ஆரம்பமானது.

இந்தப் பேச்சின்போது பொருள்சார் வர்த்தகம், சேவைசார் வர்த்தகம், முதலீடுகள், மூலப்பொருள் விதிகள், சுங்க ஒத்துழைப்பு, வர்த்தக வசதிகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய 7 விடயங்கள் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டன.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்வரும் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன்துறையில் 32 வருடங்களின் பின்னர் இலங்கை வங்கிக்கிளை திறப்பு!







காங்கேசன்துறையில் இலங்கை வங்கியின் கிளை நேற்று (திங்கட்கிழமை) சுமார் 32 வருடங்களின் பின்னர் மீண்டும் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கை வங்கியின் காங்கேசன் துறை கிளை அந்தப் பகுதி மக்களுடன் அவ்விடத்தில் இருந்து இடம்பெயர்ந்து இருந்தது. இந்நிலையில் சுமார் 32 வருடங்களின் பின்னர் நவீனதொழில்நுட்ப வசதிகளுடன் நேற்று காங்கேசன் துறையில் மீள திறந்துவைக்கப்பட்டது. குறித்த வங்கி கிளைதிறப்பு நிகழ்வில் இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர், வட பிராந்திய முகாமையாளர், யாழ் மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் இலங்கை வங்கியின் வங்கி முகாமையாளர்கள் வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தாயின் சங்கிலியை அறுத்து கொள்ளையிட்ட நபர் கைது

## போதைப் பொருளுக்கு அடிமையானவரின் செயல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் போதைஸ்துக்கு அடிமையாகிய – திருமணம் முடித்த – ஒருவர் போதைப் பொருள் வாங்க பணத்தேவைக்காக அவரின் தாயின் 5 பவுண் தங்கச் சங்கிலியை கழுத்தில் இருந்து அறுத்து கொள்ளையிட்டார் எனக் கூறப்படுகிறது.

நேற்றுத் திங்கட்கிழமை அவரைத் தாம் கைது செய்துள்ளனர் என மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார்.

இந்நபர் மாங்காட்டு பிரதேசத்தில் திருமணம் முடித்து வாழ்ந்து வருகிறார். போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் கடந்த 2ஆம் திகதி நகர்ப்பகுதியில் வாழ்ந்துவரும் தாயரின் வீட்டிற்கு சென்று பணம் கேட்டிருக்கின்றார். அவர் பணம் இல்லை என்றதும் தாயாரின் கழுத்தில் இருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்து எடுத்து கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அந்த நபரை நேற்று திங்கட்கிழமை அதிகாலை மாங்காட்டில் வைத்து கைது செய்தமையுடன் கொள்ளையடிக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர் நேற்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.தியாகேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 20 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார் என அவர் தெரிவித்தார்.

## தேர்தலைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான திட்டங்கள் எதுவும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இல்லை.

அரசும் நினைத்த மாதிரி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது.

தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனு ஏற்கப்படுவதற்கு முன்னதாக தேர்தலை ஒத்திவைக்க இடமில்லை.

நீதிமன்றம் ஊடாக அல்லது நாடாளுமன்றம் மூலமே தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வுகளை மேற்கொள்ள முடியும். அதற்கும் தகுந்த காரணங்களை முன்வைக்க வேண்டும்.

தேர்தல் தொடர்பான ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார் – என்றார்.

## ஆட்சியைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறியமுடிகின்றது. அந்தவகையில், தற்போதைய ஆய்வின்படி ஐக்கிய மக்கள் சக்தி முதலாமிடத்தில் உள்ளது. இரண்டாமிடத்தில் ஜே.வி.பியும், மூன்றாமிடத்தில் மொட்டுக் கட்சியும் உள்ளது.

இந்தச் சாதக நிலைமையைச் சரியாகப் பயன்படுத்தி அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதற்கான அதாவது, ஆட்சியைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் ஜே.வி.பி. இறங்கியுள்ளது.

உள்நாட்டில் பிரசாரத்தைத் தீவிரப் படுத்தியுள்ளது போக வெளிநாடுகளுக்கும் சென்று பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது ஜே.வி.பி.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் – தொழில் புரிந்து வரும் இலங்கையர்கள் மத்தியில் இந்தப் பிரசாரப் பணியை ஜே.வி.பி. முடுக்கிவிட்டுள்ளது.

ஆட்சியைப் பிடிக்கும் தருவாயில் வெளிநாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு இந்த மக்களைப் பயன் படுத்துவதே இதன் நோக்கம் என்று அறியமுடிகின்றது. இந்நிலையில் முன்கூட்டியே அதற்கான பணியில் இறங்கியுள்ளனர் ஜே.வி.பியினர்.

அவர்கள் பல நாடுகளுக்கு ஒரே நேரத்தில் பிரிந்து சென்று பிரசாரப் பணியைத் தொடங்கியுள்ளனர். அந்தவகையில், ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த டிசம்பர் மாதம் 9ஆம் திகதி ஐரோப்பிய நாடுகளுக்குப் பறந்தார்.

இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ், சுவிட்சலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள இலங்கை மக்களைச் சந்தித்துப் பேசினார்.

இத்தாலியின் மிலானோ நகரில் இடம்பெற்ற கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டதோடு வேறு பல கட்சிகளின் முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர்.

அதேபோல் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தார்.

பிமல் ரத்நாயக்க அயர்லாந்துக்கு விஜயம் செய்தார். விஜித ஹேரத் பஹ்ரைன், டுபாய், அபுதாபி ஆகிய நாடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தார்.

சுனில் ஹந்துன்நெத்தியும் சில நாடுகளுக்குச் செல்கின்றார்.

இவ்வாறு ஆட்சியைப் பிடிப்பதற்காக வித்தியாசமான வியூகம் ஒன்றை வகுத்துக் களமிறங்கியுள்ளது ஜே.வி.பி.

## பொலிஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் பிரதான வீதியில் தாண்டிக்குளம் சந்தியிலிருந்து 500 மீற்றர் தொலைவிலுள்ள வளைவுக்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் சடலம் ஒன்று காணப்படுகின்றது எனப் பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

குறித்த மரணத்துக்குக் காரணம் விபத்தாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மிகிந்தலை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பொலிஸ் சார்ஜன் வசந்த சந்தன நாயக்க என்பரே சடலமாக மீட்கப்பட்டவராவர். (100)

## 'மொட்டு'......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன மீண்டும் பேச்சுக்காக இன்று சந்தித்தன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

இதுகுறித்துமாவட்டதலைவர்களுடன் ஆலோசிக்கப்பட்டது.

எந்தெந்த உள்ளூராட்சி சபைகளில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவது, எந்தெந்த உள்ளூராட்சி சபைகளில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. சில உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பொதுவான சின்னத்தைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் உடன்பாடு எட்டப்பட்டது என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்–
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2023 இல் வெளியிடப்பெற்றது.